# பழந்தமிழரின் முகத்தல் அளவை முறைகள்

நமது தமிழரின் பலவகையான வாழ்க்கை முறைகளில் இந்த முகத்தல் அளவை முறைகளும் சிறப்பு வாய்ந்தவையே. இதன் மூலமாகவே பலதரப்பட்ட வியாபார பரிமாற்றம் செய்து வந்தனர்.

நம் தமிழ் மக்களால் பாரம்பரியமாக செய்து வந்த இந்த அளவை முறைகள் இந்நாளில் காணாமல் போனாலும் ஒரு சில கிராம மக்களால் பயன்படுத்தி வருவது சற்று ஆறுதலான செய்தி. அந்த அளவை முறைகளை என்னென்ன என பார்ப்போம்.

உழக்கு






| | | | |
|---|---|---|---|
| 1 | ஒரு ஆழாக்கு | = | நுற்றி அறுபத்தியெட்டு மில்லி லிட்டர்(168 ML). |
| 2 | ஒரு உழக்கு | = | முன்னூற்று முப்பத்தி ஆறு மில்லி லிட்டர் (336 |
| 3 | ஒரு கலம் | = | அறுபத்தி நாலரை லிட்டர் (64.5 L) |
| 4 | ஒரு தூணி | = | இருபத்தி ஒன்றரை லிட்டர் (21.5 L) |
| 5 | ஒரு நெய்க்கரண்டி | = | தேக்கரண்டி அளவு . |
| 6 | ஒரு எண்ணெய்க் | = | இரு நூற்றி நாற்பது மில்லி லிட்டர் {240 ML). |

கரண்டி

| | | | |
|---|---|---|---|
| 7 | ஒரு பாலாடை | = | முப்பது மில்லி லிட்டர் {30 ML). |
| 8 | ஒரு குப்பி | = | எழுநூறு மில்லி லிட்டர் {700 ML). |
| 9 | ஒரு அவுன்ஸ் | = | முப்பத்தியொரு கிராம் (31 Grm) |
| 10 | முன்னூற்று அறுபது நெல் | = | ஒரு சோடு . |
| 11 | ஐந்து சோடு | = | ஒரு ஆழாக்கு. |
| 12 | இரண்டு ஆழாக்கு | = | ஒரு உழக்கு. |
| 13 | இரண்டு உழக்கு | = | ஒரு உரி. |
| 14 | இரண்டு உரி | = | ஒரு நாழி. |
| 15 | எட்டு நாழி | = | ஒரு குறுணி. |
| 16 | இரண்டு குறுணி | = | ஒரு பதக்கு. |
| 17 | இரண்டு பதக்கு | = | ஒரு தூணி. |
| 18 | மூன்று தூணி | = | ஒரு கலம். |

## சில பாரம்பரிய அளவீட்டு முறைகள்...

### தங்கத்தை அளக்க...

4 நெல் எடை - 1 குன்றிமணி
2 குன்றிமணி - 1 மஞ்சாடி
2 மஞ்சாடி - 1 பணவெடை
5 பணவெடை - 1 கழஞ்சு
8 பணவெடை - 1 வராகநடை
4 கழஞ்சு - 1 கஃசு
4 கஃசு - 1 பணம்

### நீர்மப் பொருட்கள் மற்றும் தானியங்களை அளக்க...

5 செவிடு - 1 ஆழாக்கு
2 ஆழாக்கு - 1 உழக்கு
2 உழக்கு - 1 உரி
2 உரி - 1 படி
8 படி - 1 மரக்கால்
2 குருணி - 1 பதக்கு
2 பதக்கு - 1 தூணி
360 நெல் - 1 செவிடு
5 மரக்கால் - 1 பறை
80 பறை - 1 கரிசை

### புளி, மிளகாய் போன்றவைகளை அளக்க...

32 குன்றிமணி - 1 வராகன் எடை
10 வராகன் எடை - 1 பலம்
40 பலம் - 1 வீசை
100 பலம் - 1 கா
6 வீசை - 1 துலாம்
8 வீசை - 1 மணங்கு
20 மணங்கு - 1 பாரம்

### நேர அளவீடு

2 கண் இமை - 1 நொடி
2 கை நொடி - 1 மாத்திரை
2 மாத்திரை - 1 குரு
2 குரு - 1 உயிர்
2 உயிர் - 1 சணிகம்
12 சணிகம் - 1 விநாடி
60 விநாடி - 1 நாடி [நாழிகை]
இரண்டரை நாழிகை - 1 ஓரை
மூணே முக்கால் நாழிகை - 1 முகூர்த்தம்
2 முகூர்த்தம் - 1 சாமம்
4 சாமம் - 1 பொழுது
2 பொழுது - 1 நாள்
15 நாள் - 1 பக்கம்
2 பக்கம் - 1 மாதம்
6 மாதம் - 1 அயனம்
2 அயனம் - 1 ஆண்டு
60 ஆண்டு - 1 வட்டம்

### சிற்பம், கட்டடம், மர வேலைப்பாடுகள், நிலங்களை அளக்க..

10 கோண் - 1 நுண் அணு
10 நுண் அணு - 1 அணு
8 அணு - 1 கதிர்துகள்
8 கதிர் துகள் - 1 துசும்பு
8 துசும்பு - 1 மயிர்நுனி
8 மயிர்நுனி - 1 நுண்மணல்
8 நுண்மணல் - 1 சிறு கடுகு
8 சிறுகடுகு - 1 எள்
8 எள் - 1 நெல்
8 நெல் - 1 விரல்
12 விரல் - 1 சாண்
2 சாண் - 1 முழம்
4 முழம் - 1 பாகம்
6 ஆயிரம் பாகம் - 1 காதம் (1,200 கஜம்)
4 காதம் - 1 யோசனை